REVISED

செய்தி வெளியீடு எண் : 1193 நாள் : 16.07.2022

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் சார்பில் தியாகிகள் தினத்தை முன்னிட்டு சென்னை கிண்டி காந்தி மண்டபம், தியாகிகள் மணிமண்டப முகப்பில் அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி செண்பகராமன் ஆகியோரின் திருவுருவச் சிலைகளின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு, 17.07.2022 அன்று காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

தியாகி ஆர்யாவின் இயற்பெயர் பாஷ்யம். தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள சேரன்குளத்தில், 1907 ஆம் ஆண்டு பிறந்தார். மன்னார்குடியில் பள்ளிப்படிப்பையும் திருச்சி நேஷனல் கல்லூரியில் பட்டப்படிப்பையும் படித்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அதிக அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு, இந்திய தேசத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தவும் தன்னை தயார்படுத்திக் கொண்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற 'சைமனே திரும்பிப் போ' போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

மேலும் சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கும் கொடிக்கம்பத்தில் உள்ள பிரிட்டிஷ் கொடியான யூனியன் ஜாக்கை இறக்கி விட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆவார். ஓவியக் கலையில் சிறந்து விளங்கியதால் அரசியல் கருத்துப்படங்கள், கதைகளுக்கான சித்திரங்கள், ஏடுகளுக்கான முகப்புப் படங்கள் போன்றவற்றை வரைந்த மிகச்சிறந்த ஓவியர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், மகாகவி பாரதியார் ஆகியோரின் படங்கள் இவரால் வரையப்பட்டது.

தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் விருதுநகரில் உள்ள மண்மலைமேடு கிராமத்தில் பெரிய கருப்பசாமி நாடார் – வள்ளியம்மை தம்பதியினருக்கு 1895 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1914 ஆம் ஆண்டு பெண் வளர்ச்சிக்கான சங்கத்தின் செயலாளராகவும், கதர் இயக்கத்தில் சேர்ந்து கதர் வளர்ச்சிப் பணியையும் மேற்கொண்டார். 1917 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து திருச்சியில் நடைபெற்ற சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டமைக்காக 6 மாதம் சிறைத் தண்டனைப் பெற்றார். 1920 ஆம் ஆண்டு இராஜாஜியை சந்தித்து அவரது சீடரானார். இன்றைய தமிழகத்தின் பெயர் சென்னை மாகாணம் என இருந்தபோது, அப்பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டுமெனக்

கோரி தியாகி சங்கரலிங்கனார் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து தனது 58ஆவது வயதில் உயிர் துறந்தார்.

தியாகி செண்பகராமன் அவர்கள் திருவனந்தபுரத்தில் 15.09.1891 ஆம் ஆண்டு பிறந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து, தாய்நாட்டை வணங்கி 'ஜெய்ஹிந்த்' எனும் கோஷத்தை முழங்கியவர் தியாகி செண்பகராமன் அவர்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்திற்கு முன்னோடியாக இருந்த இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கியவர் தியாகி செண்பகராமன். 26.05.1934 ஆம் ஆண்டு தியாகி செண்பகராமன் அவர்கள் உயிர் நீத்தார்.

சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் உள்ள தியாகிகள் மணிமண்டபம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 02.10.1998 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அம்மண்டபத்தின் முகப்பில் அமைந்துள்ள தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளை 17.07.1999 அன்றும், தியாகி செண்பகராமன் அவர்களின் திருவுருவச் சிலையினை 17.07.2008 அன்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு இன்னுயிர் நீத்த விடுதலைப் போராட்டத் தியாகிகள் சங்கரலிங்கனார், ஆர்யா (எ) பாஷ்யம், செண்பகராமன் ஆகியோரின் பெரும் தொண்டினைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஜூலை 17 ஆம் தேதி தியாகிகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in